22.10.2024

C.C. No. 94/2023

ம.சா. 1 குமார்.

குறுக்கு விசாரணை

1) எதிரியை எப்படி தெரியும் என்றால் அவர் எனது குடும்ப நண்பர். எந்த தேதியில் எந்த மாதத்தில் நான் பணம் கொடுத்தேன் என்றால் நினைவில்லை. மேற்படி பணம் கொடுத்த தேதி, மாதத்தை எனது புகார் மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் டிரான்ஸ்போர்ட் கன்சல்டன்டாக வேலை செய்து வருகிறேன். நான் வருமான வரி செலுத்திவருகிறேன். அதை தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். எனது வருமானத்தை தவிர வேறு வருமானம் என் குடும்பத்தின் வழியாக வருகிறதா என்றால் இல்லை. 2021ம் ஆண்டில் நான் எதிரிக்கு கொடுத்ததாக சொல்லும் பணத்தை எவ்வகையில் கொடுத்தேன் என்றால் கையில் ரொக்கமாக கொடுத்தேன். மேற்படி ரூ. 4 லட்சத்து 50 ஆயிரத்தை எவ்வாறு ஏற்பாடு செய்து கொடுத்தேன் என்றால் நான் தொழில் செய்துவருகிறேன் அதனால் எப்போதும் கையில் பணம் இருக்கும். நான் எதிரிக்கு பணம் கொடுத்ததற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்தேனா என்றால் ரூ. 4 லட்சத்து 50 ஆயிரம் கடனில் செலுத்திய பகுதி தொகை போக பாக்கியுள்ள தொகைக்குதான் இவ்வழக்கு காசோலையை கொடுத்திருக்கிறார். செலுத்தப்பட்ட தொகைகளை வங்கி மூலமாகவும் நேரடியாகவும் செலுத்தியுள்ளார்.

2) நான் எதிரிக்கு பணம் கொடுத்தற்கு ஆதரவாக நான் ஆவணம் பெற்றேனா என்றால் ஆதரவாக முதலில் ஒருகாசோலையை கொடுத்தார் அந்த காசோலையை திரும்ப பெற்றுக்கொண்டு பாக்கி தொகைக்காக வழக்கு காசோலையை கொடுத்தார். நான் எதிரியிடம் இருந்து பெற்ற 2 காசோலைகளையும் நான் திருப்பி கொடுக்கவில்லை. என்று சொன்னால் சரியல்ல. நான் எதிரிக்கு பணம் கொடுக்கும் அளவிற்கு எனக்கு பொருளாதார வசதி இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது வருமானவரி கணக்கில் காண்பித்திருக்கிறேன். எதிரிக்கு மேற்படி ரூ. 4 லட்சத்து 50 ஆயிரத்தை திருப்பி செலுத்தும் அளவிற்கு வசதி இருந்தா என்றால் எதிரியின் மகன் வெளிநாடு

சென்று பணத்தைதிரும்ப செலுத்துவார் என்றும் கூறியதால் பணம் கொடுத்தேன். நான் ஒரே தவணையில் கேட்டவுடன் பணம் கொடுத்தேனா என்றால் 10 நாட்கள் கழித்து ஒரே தவணையில் கொடுத்தேன். எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்லும் போது மூன்றாம் நபர் சாட்சி யாரேனும் இருந்தார்களா என்றால் இல்லை.

3) எனது புகாரில் நான் வட்டி எதுவும் கேட்டதாக சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரியின் மகன் வெளிநாடு சென்று 1 மாதத்திற்குள் பணத்தை செலுத்திவிடுவதாக சொன்னதால் நான் வட்டிக்கு கொடுக்கவில்லை. எந்த தேதியில் எவ்வளவு தொகை சிறுக சிறுக செலுத்தினார் என்றால் சிறுக சிறுகவும் செலுத்தியிருக்கிறார். ஒரு முறை பெரிய தொகை ரூ. 1 லட்சமும் செலுத்தியிருக்கிறார். தேதி நினைவில்லை. எனது வங்கி கணக்கில் தொகை செலுத்தியற்கு உரிய கணக்கு பட்டியலை தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். எனக்கு இந்தியன் ஓவர்சீஸ் வங்கி காரைக்குடியில் கணக்கு உள்ளது. கணக்கு எண். 15154 ஆகும். என்னிடம் காட்டப்படும் ஆவணம் எனது வங்கி கணக்கிற்கு 19.10.2022 அன்று எதிரி ரூ.1 லட்சம் தொகை செலுத்தியற்கான வங்கி சலான் ஆகும். அது எ.சா.ஆ. 1 ஆகும் எதிரிக்கு கடன்கொடுத்த தேதியில் இருந்து இவ்வழக்கு தாக்கல் செய்திருக்கும் தேதி வரை வங்கி கணக்கை தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேன். எதிரி எனக்கு இவ்வழக்கு காசோலையை கொடுத்ததாக சொல்லும் தேதியும் எ.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள ரூ. 1 லட்சம் செலுத்திய தேதியும் ஒன்றுதான் என்றால் சரிதான்.

4) என்னிடம் காட்டப்படும் வங்கி சலான்களில் உள்ள கணக்கு எண் என்னுடையதா என்றால் 10.05.2022ல் ரூ. 60 ஆயிரமும், 09.06.2022ல் ரூ. 50 ஆயிரமும் எனது வங்கி கணக்கில் செலுத்தியது என்றால் இறுதியாக 04.12.2022ல் தேதியிட்ட ரசீதில் உள்ள வங்கி கணக்கு என்னுடையது இல்லை. மேற்படி ரசீதுகள் எ.சா.ஆ. 2 ஆகும் ( எண்ணிக்கை 2) . 04.12.2022ல் தேதியிட்ட ரசீதில் உள்ள தொகை எனது வங்கி கணக்கிற்குதான் தாக்கல் செய்யப்பட்டது என்றால் வங்கி கணக்கு தவறாக உள்ளது. நான் வட்டிக்கு தொழில் செய்து வருகிறேன் என்றால் இல்லை. எதிரிக்கு நான் ரூ. 100க்கு 10% சதவீத வட்டிக்கு பணம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. எதிரி தனது மகளின் திருமணத்திற்காக 2021ல் ரூ. 1 லட்சத்து 45 ஆயிரம் மட்டும் கடன் பெற்று

அதனையும் திருப்பி செலுத்திவிட்டார் என்றால் சரியல்ல. மேற்படி கடன் தொகைக்கு ஆதரவாக எதிரி காசோலை எண்கள் 146265, 146266 ஆகிய காசோலைகளையும், ஆதார் கார்டு நகலையும் இணைத்து கையொப்பம் மட்டும் செய்து பூர்த்தி செய்யாமல் கொடுத்தார் என்றால் சரியல்ல. எனது அலுவலகம் சிவன் கோவில் தெப்பக்குளம் அருகில் உள்ளது.

5) எனது அலுவலகத்தில் கார்த்திகேயன், மற்றும் வெங்கடேஷ் குமார் ஆகியோர் உதவியாளராக உள்ளனர். எனது அலுவலகத்தில் கலாவதி என்ற பெயரில் யாரும் வேலை செய்யவில்லை. கலாவதி எனது அலுவலத்தில் வேலை பார்த்தார் என்றாலும் நான் சொன்னதன் அடிப்படையில் எதிரி மேற்படி கலாவதியின் வங்கி கணக்கிற்கு சிறு, சிறு தொகையாக செலுத்தியிருக்கிறார் என்றால் சரியல்ல. கலாவதியை நீதிமன்றத்தில் விசாரணை செய்ய எனக்கு ஆட்சேபணை இல்லை. நான் சொன்னதன் அடிப்படையில் கலாவதி வங்கிகணக்கில் எதிரி ரூ. 78 ஆயிரத்து 546 செலுத்தியுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எதிரியும் அவருக்கு தெரிந்த வள்ளி என்ற நபரும் எனது அலுவலகத்திற்கு வந்து ரூ. 33 ஆயிரம் கொடுத்தார்கள் என்றால் இல்லை.

6) இந்நீதிமன்றத்தில் என் பெயரில் எத்தனை வழக்குகள் உள்ளது என்றால் இவ்வழக்கையும் சேர்த்து மொத்தம் 2 வழக்குகள் உள்ளது. வள்ளி என்ற நபரை தெரியும். வள்ளி எதிரியை எனக்கு அறிமுகம் செய்யவில்லை. வள்ளி என்னிடம் கடன் பெற்று திருப்பி கொடுத்துள்ளார். இந்நீதிமன்றத்தில் உள்ள மற்றொரு வழக்கு எண் சி.சி. 18/2024 என்றால் சரிதான். மேலும் சி.சி. 18/2024 வழக்கின் எதிரியான பிரசன்னா வள்ளியின் மகள் என்றால் சரிதான். மேற்படி பிரசன்னா தாவா வழக்கில் எதிரியான முத்தரசிக்கு கடன் பெற்று கொடுத்து பிணையமாக அவரது காசோலையை கொடுத்தார் என்றாலும் அப்பிணைய காசோலையை நான் திருப்பி கொடுக்காமல் மேற்படி பிரசன்னா மீதும் சி.சி. 18/2024 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி காசோலைகளை திருப்பி கொடுக்காததால் பிரசன்னாவும், முத்தரசியும் காரைக்குடி தெற்கு காவல் நிலையத்தில் புகார் அளித்தனர் என்றால்அது பற்றி எனக்கு தெரியாது.

7) மேற்படி புகாரின் விசாரணைக்கு நானும், எனது உதவியாளர் கலாவதி ஆஜராகி எழுதிக்கொடுத்தோம் என்றால் சரியல்ல. காவல் நிலையத்திலிந்து என்னை விசாரணைக்கு அழைக்கவில்லை. விசாரணையும் செய்யவில்லை. எதிரி தனது மகளின் திருமணத்திற்கு பெற்ற ரூ. 1 லட்சத்து 45 ஆயிரத்தை கடனாக பெற்று எனது வங்கி கணக்கில் ரூ.2 லட்சத்து 38 ஆயிரத்து 500 செலுத்தியுள்ளார் என்றும், கலாவதி வங்கி கணக்கில் ரூ.78 ஆயிரத்து 546 ம் செலுத்தியுள்ளார் என்றாலும் நேரில் ரூ. 33 ஆயிரம் மொத்தமாக ரூ.3 லட்சத்து 50 ஆயிரம் வட்டியும் அசலுமாக சேர்த்து கணக்கை முடித்தார் என்றால் சரியல்ல. எதிரி கடனை திருப்பி செலுத்திய பின்னர் ஆதரவாக கொடுத்த காசோலைகளை திருப்பி கேட்டபோது கொடுக்காமல் நானாக பூர்த்தி செய்து இவ்வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. காசோலையில் உள்ள விபரத்திற்கும் கையொப்பத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல.

8) எதிரி காசோலையை பூர்த்தி செய்யவில்லை என்றால் எதிரியே பூர்த்தி செய்து கையொப்பம் செய்து கொடுத்தார். மேற்படி வழக்கு காசோலையை கையெழுத்து நிபுணருக்கு அனுப்பி அறிக்கை பெற தயாரா என்றால் அனுப்புவதற்கு ஆட்சேபணை இல்லை. எதிரியின் கணவர் 2019 ல் இறந்து விட்டார் என்றாலும், மேலும் எதிரிக்கு சர்க்கரை, தைராய்டு மற்றும் கிட்னி பாதிக்கப்பட்டு எந்த வேலைக்கும் செல்ல முடியாமல் மகன் அனுப்பும் பணத்தை வைத்தும், மருமகளின் நகைகளை அடகு வைத்தும் எனக்கு பணத்தை செலுத்தி எனது அசலையும் வட்டியையும் செலுத்தினார் என்றால் சரியல்ல. இவ்வழக்கு தாக்கல் செய்தபின்னர் எதிரியின் மகன் பணத்தை ஏன் கொடுக்கவில்லை என்று அடித்து எதிரியை வீட்டை விட்டு வெளியேற்றி விட்டார் என்றாலும் தற்போது தனியார் விடுதியில் தங்கி சேல்ஸ் வுமனாக வேலை செய்து வருகிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதன் காரணமாக நான் அனுப்பிய சட்ட அறிவிப்பு எதிரி முகவரியில் இல்லை என்று திருப்பப்பட்டது என்றால் எதிரியின் வீட்டு முகவரிக்குதான் அனுப்பினேன்.

9) எதிரி என்னிடம் காசோலையை கொடுத்தபோது எதிரியின் வங்கி கணக்கு பயன்பாட்டில் இருந்தது என்றாலும், கடனை திருப்பி செலுத்திய பின்னர் நான் வழக்கு தாக்கல் செய்த காரணத்தினால் எதிரியின் மகன்கள் எதிரியை வீட்டைவிட்டு

வெளியேற்றிய காரணத்தினாலும், எதிரி தனது வங்கி கணக்கை முடித்துவிட்டு விடுதியில் தங்கி வெளியில் வேலை செய்து வருகிறார் என்றால் சரியல்ல. எதிரி வெளியில் தங்கியிருக்கும் விபரம் எனக்கு தெரியாது. மேற்படி விபரம் தெரியாமல் எதிரி 2019 ல் கொடுத்த காசோலையை 2023 ம் ஆண்டு பூர்த்தி செய்து வசூலுக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. நான் எதிரியிடம் தொடர்ச்சியாக பணம் கேட்டுக்கொண்டு இருந்தேன். நான் எனது புகார் மனுவில் பலமுறை கேட்டும் எதிரி பணத்தை திருப்பி செலுத்தாததால் 19.10.2022 ல் வழக்கு காசோலையை கொடுத்து 6 மாத காலத்திற்குள் பணத்தைசெலுத்துவதாக சொன்னதாக கண்டிருப்பது பொய் என்றால் சரியல்ல. கணவரை இழந்த ஒரு பெண்ணின் மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்திருக்கும் என் மீது ஏன் மானநஷ்டஈடு வழக்கு தாக்கல் செய்யக்கூடாது என்றால் அது பொய்யாகும்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா, B.Sc., B.L., (Hon's))
விரைவு நீதிபதி காரைக்குடி